| | | | |
|---|---|---|---|
| | **வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்** | | |
| | **மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018** | | |
| | தரம் - 8 | புவியியல் | நேரம் : 2.00 |

சுட்டெண் : ..............................

## பகுதி – I

❖ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. ஒளியையும், வெப்பத்தையும் தரும் வான் பொருட்கள்
    1) கோள்கள் 2) நட்சத்திரங்கள்
    3) சிறுகோள்கள் 4) தூமகேதுக்கள்

02. சூரியனிலிருந்து தூரத்தின் அடிப்படையில் ஆறாவதாக அமைந்துள்ள கோள்
    1) யுரேனஸ் 2) வியாழன் 3) சனி 4) செவ்வாய்

03. ஞாயிற்றுத்தொகுதியில் உயிரினங்கள் வாழ்கின்ற ஒரேயொரு கோள்
    1) செவ்வாய் 2) புவி 3) வியாழன் 4) வெள்ளி

04. செவ்வாய்க்கோளின் உபகோள்கள்
    1) சந்திரன், ஏரிஸ் 2) மாக்கேமாக், ஹொமியா
    3) டைட்டான், செரிஸ் 4) பொபோஸ், டீமோஸ்

05. புவிச்சுற்றுகையினால் ஏற்படும் விளைவு
    1) இரவு, பகல் 2) பருவகாலமாற்றம்
    3) காலநிலை மாற்றம் 4) நேர மாற்றம்

06. வளி மண்டலத்தில் அதிகளவு சதவீதத்தில் காணப்படும் வாயு
    1) ஒட்சிசன் 2) நைதரசன் 3) காபனீரொக்சைட் 4) ஆகன்

07. தென்னாசிய வலயத்தின் கிழக்கெல்லையாக அமைந்திருப்பது
    1) அவுஸ்தரேலியா 2) இமயமலை 3) வங்காளவிரிகுடா 4) இந்து சமுத்திரம்

08. தென்னாசிய பிரதேசத்திற்குரிய தீவுகளிலொன்று
    1) நிக்கோபார் தீவு 2) சுமாத்திரா 3) நியூசிலாந்து 4) மடகஸ்கார்

09. தென்னாசிய நாடுகளிடையே நிலப்பரப்பில் மிகப்பெரிய நாடு
    1) பாகிஸ்தான் 2) நேபாளம் 3) பங்களாதேஸ் 4) இந்தியா



kalvi.lk

10. இந்தியாவின் இராஜஸ்தான் மாநிலத்தில் அமைந்துள்ள பாலைவனம்
1) கோபி பாலைவனம் 2) தார் பாலைவனம்
3) சகாரா பாலைவனம் 4) அற்றகாமா பாலைவனம்

11. இலங்கையின் மொத்த நெல் உற்பத்தியில் பெரும்பகுதி பெறப்படும் வலயம்
1) ஈரவலயம் 2) அரைகுறை வறள் வலயம்
3) உலர்வலயம் 4) மலைநாடு

12. கரையோரப் பிரதேசத்தில் உயிர்ப்பல்வகைமை உயர்மட்டத்தில் காணப்படும் தனித்துவம் மிக்க சூழற்றொகுதி
1) அயனக்காடுகள் 2) கண்டல் தாவர வலயம்
3) சதுப்பு நிலங்கள் 4) புல் வெளிகள்

13. சூரியனிலிருந்து வெளிவருகின்ற புறஊதாக் கதிர்களைப் புவியினுள் வரவிடாது தடுக்கும் படை
1) இடை மண்டலம் 2) படை மண்டலம்
3) மாறன் மண்டலம் 4) வெப்ப மண்டலம்

14. கங்கண முருகைக்கற் பாறைகளினால் உருவாகியுள்ள தென்னாசிய நாடு
1) இந்தியா 2) இலங்கை 3) பங்களாதேஸ் 4) மாலைதீவு

15. பங்களாதேஸில் தங்கநார் என அழைக்கப்படும் பயிர்
1) சணல் 2) கரும்பு 3) பருத்தி 4) தேயிலை

16. இந்தியாவின் இரண்டாவது பெரிய நகரம்
1) புதுடெல்லி 2) சென்னை 3) கோவா 4) மும்பாய்

17. இந்துக்களின் புனித நதியாகக் கருதப்படுகின்ற நதி
1) மகாவலி நதி 2) ஐராவதி நதி 3) கங்கை நதி 4) நைல் நதி

18. சார்க் அமைப்பினுள் அங்கத்துவம் பெற்றிருக்கும் தென்னாசிய வலயத்தைச் சேராத நாடு
1) இலங்கை 2) ஆப்கானிஸ்தான் 3) இந்தியா 4) பங்களாதேஸ்

19. இலங்கையின் இடவிளக்கப்படங்களில் நிர்வாக எல்லைகளை வரைவதற்குப் பயன்படுத்தப்படும் நிறம்
1) சிவப்பு 2) பச்சை 3) கறுப்பு 4) நீலம்

20. ஒடுங்கிய நீண்ட வடிவில் பரந்துள்ள உயர்ந்த பிரதேசம்
1) மேட்டுநிலம் 2) கணவாய் 3) பள்ளத்தாக்கு 4) மலைத்தொடர்

(20x2=40புள்ளிகள்)

## பகுதி – II

❖ முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

01.

1) புவியியல் பாடத்தில் முதலாம் தவணைக்காக உமக்கு வழங்கப்பட்ட கணிப்பீட்டு வகையைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

2) மேற்படி கணிப்பீட்டினை மேற்கொண்ட பாட அலகினை எழுதுக.

(2 புள்ளிகள்)

3) அக் கணிப்பீட்டினைப் பூர்த்தி செய்வதற்கு நீர் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் நான்கு தருக.

(2 புள்ளிகள்)


4) கணிப்பீட்டினைப் பூர்த்தி செய்வதற்குத் தகவல்களைத் திரட்டிய வழிகள் இரண்டினை எழுதுக.

(2 புள்ளிகள்)

5) கணிப்பீட்டினைப் பூர்த்தி செய்ததன் மூலம் பாடவிடய ரீதியாக நீர் பெற்றுக் கொண்ட பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

02. கீழே தரப்பட்டுள்ள ஆசியப்புறவுருவப்படத்தில் 1 – 12 வரை இலக்கமிடப்பட்டவற்றுள் பொருத்தமானவற்றை தரப்பட்ட அம்சங்களுக்கு நேரே அடைப்புக்குள் எழுதுக.






kalvi.lk

| | | | |
|---|---|---|---|
| 1) வங்களா விரிகுடா | (...........) | 7) கஸ்பியன் கடல் | (...........) |
| 2) கங்கை நதி | (...........) | 8) இலங்கை | (...........) |
| 3) யப்பான் | (...........) | 9) செங்கடல் | (...........) |
| 4) மும்பாய் | (...........) | 10) சுமாத்திரா | (...........) |
| 5) மேற்கு மலைத்தொடர் | (...........) | 11) பாக்கு நீரிணை | (...........) |
| 6) புதுடெல்லி | (...........) | 12) கராச்சி | (...........) |

(12 புள்ளிகள்)

03.

1) புறக்கோள்கள் நான்கையும் பெயரிடுக.

(2 புள்ளிகள்)

2) பின்வரும் சிறப்புக்களைக் கொண்ட கோள்களைக் குறிப்பிடுக.

a) இரவு வானில் மிகத்தெளிவாகப் புலப்படக்கூடிய கோள்

b) கோள்களில் மிக உயர்ந்த ஈர்ப்பு சக்தியைக் கொண்ட கோள்

c) மிக வெப்பமான கோள்

(3 புள்ளிகள்)

3) பிரபஞ்சம் பற்றிய தகவல்கள் பலவற்றைக் கண்டறிந்த விஞ்ஞானிகள் மூவரின் பெயர்களைத் தருக.

(3 புள்ளிகள்)

4) சூரியனையும், சந்திரனையும் அடிப்படையாகக் கொண்டு இலங்கைச் சமூகத்தில் காணப்படும் இரண்டு நம்பிக்கைகளைத் தருக.

(4 புள்ளிகள்)

04.

1) பருவகாலங்கள் நான்கையும் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

2) a) வளிமண்டலத்தில் ஏற்படும் வளியின் அசைவு எவ்வாறு அழைக்கப்படும்?

b) வளிமண்டலம் புவியுடன் இணைந்திருப்பதற்கான காரணம் யாது?

c) வளிமண்டலச் சேர்க்கையில் பிரதான பதார்த்தங்களாகக் குறிப்பிடப்படுவது எது?

(3 புள்ளிகள்)

3) வளிமண்டலம் மாசடைவதற்கான மனித நடவடிக்கைகள் மூன்றைக் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

4) நீரின் முக்கியத்துவம் நான்கு எழுதுக.

(4 புள்ளிகள்)



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

05.

1) இமாலயப் பிரதேசத்தில் வாழ்கின்ற பழங்குடிப்பிரிவினரில் நான்கு பிரிவினரைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

2) பின்வரும் தென்னாசிய நாடுகளின் தலை நகரங்களை எழுதுக.

a) இலங்கை -

b) பாகிஸ்தான் -

c) நேபாளம் -

(3 புள்ளிகள்)

3) நகரங்களில் எதிர் நோக்கப்படுகின்ற பிரச்சினைகளில் மூன்றினை எழுதுக.

(3 புள்ளிகள்)

4) சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் மீன்பிடிக் கைத்தொழிலுடன் தொடர்புடைய விருத்தியடைந்த கைத்தொழில்கள் இவ்விரண்டினைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

06.

1) புவிமேற்பரப்பில் காணப்படும் பண்பாட்டு அம்சங்கள் நன்கைக் குறிப்பிடுக.

(2 புள்ளிக்)

2) இலங்கையின் ஆகக் கூடிய நீளம் வடக்கே (a) ........................................ இருந்து தெற்கே (b) ................................... முனை வரை (c) .................... கிலோமீற்றர்களாகும்.

(3 புள்ளிகள்)

3) புவிமேற்பரப்பில் காணக்கூடிய தரைத்தோற்ற அம்சங்கள் மூன்று தருக.

(3 புள்ளிகள்)

4) பின்வரும் அம்சங்களைப் பொருத்தமான நிறங்கள், குறியீடுகளைப் பயன்படுத்தி வரைந்து காட்டுக.

1) பிரதான வீதி
2) குளம்
3) மாகாண எல்லை
4) புகையிரத நிலையம்

(4 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp 075 287 1457